**வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்த்து 16 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) இரட்டைக்குளம், அக்போபுர மற்றும் மாமடுவையில் அமைந்துள்ள 03 கட்டிடங்களிலும் உள்ள கடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்தாக கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை வங்கியில் நிலையான வைப்பாகவுள்ள ரூபா 2.5 மில்லியனுக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வட்டி கணக்கிடப்பட்டு கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்கு உரித்தான 09 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்தகாரர்களின் வைப்பான ரூபா 253,412 மீண்டும் செலுத்தவேண்டிய வைப்பின் கீழ் கணக்குகளில் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் வருடத்திற்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட கணக்காய்வு கட்டணம் ரூபா 49,465 திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்காமல் மீளாய்வாண்டின் செலவினத்திற்கு சீராக்கஞ் செய்யப்பட்டதால் மிகையானது அதே தொகையால் குறைவாகக் காணப்பட்டது.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

வங்கி மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் 07 நிலையான வைப்புக்களின் மீதிகளின் மொத்தம் ரூபா 7,232,948 ஆக இருந்த போதும்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் ரூபா 7,264,642 ஆக இருந்ததுடன் ரூபா 31,694 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டில் டிசம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய கணக்குகள் நான்கின் பெறுமதி ரூபா 4,913,425 ஆக இருந்ததுடன் அந்த பெறுமதியில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள பெறுமதி ரூபா 2,062,539 ஆகும்.

### 1.3.4 கணக்காய்வுச் சான்றுகள் இல்லாமை

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ரூபா 980,095 ஆன நூல் நிலைய புத்தகங்களின் பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள விபரமான உப பதிவேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ரூபா 88,873,621 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை சான்றுபடுத்தக்கூடிய ஆவணங்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டம் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்கி நடவாமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை விதிகள் கோவை (நிதியும் நிருவாகமும்) | |
| 5(7) விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கை சம்பந்தமாக போதுமான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| 165 விதி | பிரதான பேரேடொன்று பராமரிக்கப்படாமை. |
| 166 விதி | நாட்குறிப்பொன்று பராமரிக்கப்படாமை. |
| 65 விதி | கால எல்லையின் இறுதியில் வருமான எழுதுவினைஞர் கொடுப்பனவு |
| 130 விதி | பீ.எஸ் 8 க்கு அமைவாக சில்லறைக் காசேட்டுப் புத்தகம் நாளதுவரையாகப் பேணப்படாமை |
| 152 விதி | பீ.எஸ் 6 க்கு அமைவாக மாதாந்த பெறுவனவுகள் கூற்றுக்கள் பராமரிக்கப்படாமை |
| 155 விதி | பீ.எஸ் 10 க்கு அமைவாக பிரதான காசேட்டுப் புத்தகம் பேணப்படாமை |
| 159 விதி | பீ.எஸ் 15 க்கு அமைவாக மாதாந்த ஒன்றிணைந்த பெறுவனவுகள் பகுப்பாய்வு பராமரிக்கப்படாமை. |

| | | |
|---|---|---|
| | 163 விதி | பீ.எஸ் 19 க்கு அமைவாக சுருக்க வருமான பதிவேடு பேணப்படாமை |
| | 169 விதி | பீ.எஸ் 40 மற்றும் 43 க்கு அமைவாக முறையே மதிப்பீட்டுப் பேரேடு மற்றம் வேலை விபர கணக்கு புத்தகத்தை பராமரிக்காமை |
| | 180 விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் அல்லது வருமான சேகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் இது சம்பந்தமான கருமங்களை செயற்படுத்தும் உத்தியோகத்தர்களினால் பிணை வைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 193 விதி | பாதீட்டுக்குட்பட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒவ்வொரு வருமான விடயங்களின் கீழ் மற்றும் ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழுள்ள மிகை அல்லது செலவு செய்யப்படாமல் எஞ்சியுள்ள மீதிகள் சம்பந்மான விடயங்களை விளக்கமளிக்கும் அறிக்கையுடன் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ஆம் திகதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 217 விதி | பீ.எஸ் 46 க்கு அமைவாக சபையினால் பிரயோசனப்படுத்தும் மற்றும் சபையினால் பதிவுக்குட்படுத்தும் அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமாக பதிவேடொன்று பயன்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயகச் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>------------------------------------------------------------------------ | |
| | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 | மீளாய்வாண்டிலே உள்ளகக் கணக்காய்வின் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் பிரதிகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 570 | ஒவ்வொரு அரை ஆண்டு இறுதியின் போதும் முடிவுற்ற அனைத்து வைப்புக்கள் சம்பந்தமாகவும் பட்டியல் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்தும் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் (3) | முடிவுற்ற வைப்புக்கள் அரசின் வருமானத்திற்கு மாற்றுவதற்கோ அல்லது முடியுமான அளவு அவசரமாக மீண்டும் கொடுப்பனவை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தும் ரூபா 499,303 பெறுமதியான முடிவுற்ற வைப்புக்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 ஜீலை 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒவ்வொரு மாதத்திற்காகவும் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (VAT) சம்பந்தமான விபரம் கணக்காய்வாளர் நாயகத்திற்கான பிரதியுடன் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு வருமான |

திணைக்களத்திற்கு அறியத்தந்திருக்க வேண்டுமெனினும் 2014 ஆம் வருடத்தின் செலுத்தப்பட ரூபா 2,777,659 உம் மற்றும் 2015 ஆம் வருடத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,050,327 வும் மற்றும் மீளாய்வாண்டிற்கான செலுத்தப்பட்ட ரூபா 2,686,465 சம்பந்தமாகவும் மேற்கூறியபடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் மீண்டு வரும் செலவினத்திலும் பார்க்க குறைந்த வருமானம் ரூபா 1,691,900 ஆக இருந்ததுடன் இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,158,148 ஆகும்.

### 2.2 பகுப்பாய்வு நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிலேயே மூலதனச் செலவாக குறிப்பிடப்பட வேண்டிய ரூபா 5,945,707 மீண்டுவரும் செலவாக குறிப்பிடப்பட்டதனால் முன்னைய ஆண்டின் ரூபா 4,158,148 ஆன மீண்டுவரும் செலவினத்திலும் பார்க்க கூடிய வருமானம், மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,691,900 வினால் குறைவடைவதற்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியுள்ளது.

### 2.3 வருமாண முகாமைத்துவம்

#### 2.3.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 123(2) பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அனைத்து உறுப்புரிமைகளும் அந்த பிரிவின் (1) தான உப பிரிவின் மூலம் வேண்டப்பட்ட அறிவித்தலுடன் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்ததும் உறுப்புரிமையினை தயாரித்து அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டில் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

#### 2.3.2 வரி வாடகை

கீழ் குறிப்பிட்டவைகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாண சபைகள் ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் பிரகாரம் கடைகளின் வாடகை குறைந்தது 5 வருடத்திற்கு ஒரு முறையாவது மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பிடப்பட வேண்டுமெனினும் அப்படி செய்யாமல் விலை மனுக்கோரலை நிறைவேற்றி சபைக்கு உரிய 13 கடைகளை வாடகைக்கு வழங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிலே 7 கடைகளை வருடம்பூராகவும் வாடகைக்கு வழங்கும் நடவடிக்கையை மேற்கொள்ளாமையினால் ரூபா 96,900 வருமானத்தை சபை இழந்திருந்தது.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 7 தொலைபேசி கோபுரங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட தினத்திலிருந்து மீளாய்வாண்டு வரை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 114,000 அறவிடப்பட வேண்டியிருந்தும் அந்த வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126(X)(ஆ) பிரிவின் பிரகாரம் சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் சுற்றுலா வியாபாரிகளுக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் கொண்டு நடாத்தப்படுகின்ற, சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டிய வியாபார நிலையங்கள் சம்பந்மாக அடையாளம் காணல் இடப் பெற்றிருக்கவில்லை.

### 2.3.4 வேறு வருமானங்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126(vii) (ஊ) பிரிவின் பிரகாரம் சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் பலகைக்காக கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிலே ரூபா 160,500 மொத்தமாக 49 அறிவித்தல் பலகைகளுக்காக கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் நிறுவப்பட்டுள்ள 210 குழாய் கிணறுகளுக்காக கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 47 பிரிவின் பிரகாரம் சபைக்கு உட்பட்ட பிரதேசத்திற்குள் நிர்மாணப் பணிகளுக்காக அனுமதி பெற்றுக் கொடுக்கப்படவில்லையென்பதுடன், கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத்தீர்வை கட்டணம்

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) பல்வேறு கட்டளைகளின் கீழ் நீதவான் நீதி மன்றத்தினால் மீளாய்வாண்டிலே சபையின் செயலாளருக்கு ரூபா 2,852,677 தொகை அனுப்பப்பட்டிருந்ததுடன் டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவைத் தொகை ரூபா 803,084 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிலே முத்திரைத் தீர்வை கட்டணமாக சபையின் செயலாளருக்கு ரூபா 144,045 தொகை அனுப்பப்பட்டிருந்ததுடன் டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவைத் தொகை ரூபா 2,578,357 ஆகும்.

## 2.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிலே டிசெம்பர் 31 ஆம் திகதியில் சபையினால் அனுமதித்த பதவியணியினரில் 2013 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்த 04 வாகன ஓட்டுனர் பதவிகளும் மற்றும் வேறு 04 பதவிகளும் இதுவரையும் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையை கைவிட்டுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்த அறவிடப்படவேண்டிய ரூபா 112,347 கடன் மீதி 2013 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து காணப்பட்டதுடன் 2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களிலே எந்த விதமான பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆம் வருடத்திலே பொருட் கணக்காய்வின்போது நீக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட 19 பொருட்கள் சம்பந்தமாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாண சபைகளை மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் சபையிலுள்ள கலாசார மத்திய நிலையத்தின் பாவணைக்காக ரூபா 2,223,032 பெறுமதியான காரியாலய உபரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த மத்திய நிலையத்தை ஆரம்பிப்பதற்கான சரியான தினத்தை தீர்மானிக்காமல் மத்திய நிலையத்திற்காக மேற்கூறிய பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதனால் 2017 ஏப்ரில் 27 ஆம் திகதியிலும் இரண்டு வருடகாலங்கள் இந்த பொருட்கள் பிரயோசனப்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. மேலும் அந்த பொருட்களின் உத்தரவாத காலம் 02 வருடங்களை கடந்திருந்தது.

(ஆ) பிரதேச சபையின் இலட்சியக் கூற்றிற்கிணங்க இற்கிணங்க சபைக்குட்பட்ட பிரதேசத்தை பூரண அபிவிருத்திக்குட்படுத்த வேண்டுமென்றும் பிரதிபலன் பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனினும் சபையினால் சபையின் நிதியினால் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திற்குள் 2012 ஆம் வருடத்திலிருந்து 2015 ஆம் வருடம் வரை எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன் மீளாய்வாண்டிலே ரூபா 34,702 அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. பிரதேச சபையின் நிதியை பரீட்சித்த போது நிலையான வைப்புக்களில் ரூபா 7,264,642 முதலிடப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு மாதத்திலும் வங்கிக்கணக்கில் ரூபா 06 மில்லியனுக்கும் 09 மில்லியனுக்கும் இடையிலான அளவில் நிதி பேணப்பட்டிருந்தது.

## 2.6 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குரியதான 4 சில்லுகளுடைய 08 உழவு இயந்திரங்களும் 2 சில்லுகளுடைய 3 கை உழவு இயந்திரங்களும் (டிராக்டர்) காணப்பட்டதுடன் அந்த டிராக்டர் வாகனத்தின் மூலம் 2016 டிசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது ஒரு டிராக்டர் வாகனத்தை மாத்திரம் பயன்படுத்தி ரூபா 27,230 மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரியதான 22 வாகனங்கள் காணப்படுவதுடன் அந்த அனைத்து வாகனங்களையும் செலுத்துவதற்கு ஒரு ஓட்டுனர் மாத்திரமே காணப்பட்டார்.

(இ) இயந்திர இயக்கக்கூடியவர் எவரும் இல்லாமையின் காரணமாக சபைக்குரியதான 3 இயந்திரங்களை வேறு சேவையாளரினால் இயக்கப்படுகின்றன.

(ஈ) பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தினுள் நிலைநிறுத்தப்பட்டுள்ள 03 வாராந்த சந்தைகளை நிர்மாணிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலே ரூபா 4,237,251 செலவிடப்பட்டிருந்தாலும் 2017 ஏப்ரில் 28 ஆம் திகதி வரையும் அதனை பாவனைக்குட்படுத்தியிருக்கவில்லை.

(உ) சபைக்குரித்தான மரூடி ஜீப் வாகனம் 2013 ஆம் வருடத்திலிருந்தும், டிபர் வாகனம் மற்றும் பவுசர் வாகனம் 2014 ஆம் வருடத்திலிருந்தும், MD 90 உடைய மோட்டார் சைக்கிள் 21 வருடங்களாகவும் பிரயோசனப்படுத்தப்படாமல் காணப்படுகின்றன.

**2.7 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) பிரதேச சபைக்கு புதிய காரியால கட்டிடம் நிர்மாணித்தல் - ரூபா 14,926,848**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாணம் திட்டமிடப்படும்போது மேல் மாடிக்கு தரை ஓடு (Floor Tile) பதிப்பதற்காக மத்திப்பீடு செய்யப்படாத நிலையில் மேலதிக வேலைகளின் கீழ் ரூபா 850,500 பெறுமதியான வழுக்கும் தரை ஓடு (Skip Tile) பதித்ததனால் பெறுகையில் திறந்த விலை மனுக்கோரலினால் கிடைக்க வேண்டிய நன்மை கிடைக்க முடியாமல் போயிருந்தது.

(ii) மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் G-11 இன் கீழ் வழுக்கும் ஓடு (Skip Tile) பதிப்பதற்கு பரிந்துரை வழங்கப்படாத நிலையில் ரூபா 783,700 பெறுமதியான வழுக்கும் தரை ஓடு (skip Tile) பதிக்கப்பட்டிருந்தது. அந்த ஓடானது வழுக்குத் தன்மையை கொண்டுள்ளதால், அதனால் ஆபத்து இல்லையென சொல்லமுடியாது என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) கலாசார மத்தியநிலையத்தை நிர்மாணித்தல்**

கலாசார மத்திய நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிக்காக ரூபா 6,000,000 வுக்கு ஒப்பந்த அடிப்படையில் ரூபா 5,400,890 தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 45, 46 மற்றும் 47 இன் கீழ் கைப்பிடியை வழங்கி பொருத்துவதற்கு ரூபா 460,382 செலுத்தப்பட்டிருந்தாலும் அந்த கைப்பிடி முறையாக பொருத்தாததன் காரணமாக ஆடிக் கொண்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் வேலை விடய இலக்கம் 68 இன் படி ரூபா 693,000 செலவிடப்பட்டு மேல் மாடியில் 10 அறைகளுக்கு ஜன்னல் பொருத்தப்பட்டிருந்தது. அந்த ஜன்னலுக்காக இரும்புக்கம்பி அல்லது Grill பொருத்துவது பௌதீக பரிசீலனையின் போது அத்தியாவசியம் என்பது அவதானிக்கப்படடது. மேலும் இந்த அவசியத்தன்மை இடம்பெறாததன் காரணமாக தங்கியிருப்பவர்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

**(இ) மஹமைலன் குளம் டாஸ்போமர் பாதையை தார் இட்டு நிர்மாணித்தல் - ரூபா 1,065,053**

---

(i) மதிப்பீட்டின் தொடர் இலக்கம் 07 இன் படி பாதம பொரல் மண் இட்டு தட்டப்படவேண்டுமெனினும் பொரல் மண் தட்டப்படாததனால் பாதம மழை நீரினால் கழுவப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் படி பாதையின் அகலம் 3.3 மீற்றர் ஆக இருக்க வேண்டியிருந்தும் பௌதீக பரிசீலனையின் போது பாதையின் அகலம் 2.7 மீற்றரிலிருந்து 2.8 மீற்றர் வரையான அளவில் காணப்பட்டது தெரிய வந்தது.

(iii) மதிப்பீட்டின்படி பாதத்தின் ஒரு பக்கத்தின் அகலம் 02 அடியாக இருக்க வேண்டியிருந்தும் 1 அடி, 1.5 அடிகளுக்கிடையான அளவில் பாதம இடப்பட்டதனால் மதிப்பீட்டிற்கு அனுகூலமாக நடைமுறைப்படுத்தாமையால் பாதையின் நீண்ட கால உறுதிக்கு பங்கமேற்படாது என கூற முடியாதுள்ளது.

**(ஈ) மஹகச்சகுடி, பிறப்பன்மடுவை பாதையை தார் இட்டு நிர்மாணித்தல் - ரூபா 2,189,175**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மதிப்பீட்டின் தொடர் இலக்கம் 10 இன் படி பாதம பொரல் மண் இட்டு தட்டப்பட வேண்டுமெனினும் பொரல் மண் தட்டப்படாததனால் பாதம மழைநீரினால் கழுவப்பட்டிருந்தது.

(ii) பாதையின் முழுமையான தூரமாகிய 390 மீற்றரில் 200 மீற்றரளவிலான தூரம் நிலத்திற்கு கீழ் இறங்கியிருந்தது.

(iii) மதிப்பீட்டின் படி பாதத்தின் ஒரு பக்கத்தில் அகலம் 2.5 அடியாக இருக்க வேண்டியிருந்தும் 1.5 அடி, 2 அடிகளுக்கிடையிலான அளவில் பாதம இடப்பட்டதனால் மதிப்பீட்டிற்கு அனுகூலமாக நடைமுறைப்படுத்தாமையால் பாதையின் நீண்ட கால உறுதிக்கு பங்கமேற்படாது என கூறமுடியாதுள்ளது.

**(உ) இரட்டை பெரியகுளம் பொது கிணறு நிர்மாணித்தல் - ரூபா 485,700**

---

(i) பொது கிணறு நிர்மாணித்தலுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தபோதும் சபையின் அங்கத்தவரொருவரின் தனிப்பட்ட காணியில் கிணறு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் தொடர் இலக்கம் 17, 18 மற்றும் 20 இன் கீழ் முறையே ஒரு கயிறு 02 வாளிகள் மற்றும் பெயர்ப்பலகையை வழங்கி பொருத்தாத போதும் அதற்காக முறையே ரூபா 1548, 2052 மற்றும் 10,000 கொடுப்பனவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

**2.8 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**2.8.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய இலக்கம் DMA /2009 (2) உடைய சுற்றறிக்கையின் படி உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரினால் போதியளவு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2012 ஜனவரி மாத 13 ஆம் திகதிய DMA/2012/101 உடைய சுற்றறிக்கையின் மூலம் உள்ளக கணக்காய்வு நடவடிக்கை செயற்திறனுடையதாக மேற்கொள்வதற்காக கணனிமயப்படுத்தப்பட்ட தொடர்பாடல் முறைமையினால் (CIS) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்வது நிறைவேற்றப்பட வேண்டுமென்று வழிகாட்டுதல்களும் வினாக்கொத்தும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் குறித்த சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 விடையளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

2017 ஜீன் 05 ஆம் திகதியாகும் போது 2015 ஆம் வருடத்திற்கு உரிய கணக்காய்வு ஐய வினாக்கள் மூன்றுக்கு மற்றும் 2016 ஆம் வருடத்திற்கு உரிய கணக்காய்வு ஐய வினாக்கள் மூன்றுக்கு மறுமொழி முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் குறைபாடு சம்பந்தமாக அடிக்கடி பிரதேச சபையின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகளில் மீது விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) வாகனங்கள் நிருவாகம்
(உ) உள்ளகக் கட்டுப்பாடு